1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினதும் (''பணியகம்''), பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (குழுமம்) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பணியகத்தினதும் குழுமத்தினதும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் மற்றும் குழுமம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகம் மற்றும் குழுமத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகம் மற்றும் குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகம் மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் மற்றும் குழுமம் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகம் மற்றும் குழுமத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகம் மற்றும் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகம் மற்றும் குழுமத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகம் மற்றும் குழுமத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் மற்றும் குழுமம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் மற்றும் குழுமம் அவற்றின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்ப ட்டிருந்ததனவா என்பதும், மற்றும்

- பணியகம் மற்றும் குழுமத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் சம்பந்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இணங்காதுள்ள நியமத்துக்கான தொடர்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆவது பிரிவின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை காலத்தை கம்பனி ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்தல் வேண்டும். இருப்பினும், 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஏறத்தாழ ரூபா 419.92 மில்லியன் கிரயமான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள பொருளாதார ஆயுட் காலத்தை மறு மதிப்பீடு செய்யாமல் பணியகத்தால் தொட ர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.	பொறியியல் கொள்முதல் கட்டுமானப் பிரிவின் (EPC) சொத்துக்கள் ஏற்கனவே மறு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஆலோசனைப் பிரிவு மற்றும் பிரதான அலுவலக தளங்களின் பயனுள்ள ஆயுட்காலம் மறு மதிப்பீடு செய்ய ப்பட்டு மதிப்பிடப்பட் டுள்ளது. இந்த பெறுமதிகள் 2025 இல் கணக்குகளில் சரிசெய்யப்படும்.	இலங்கை கணக் கீட்டு நியமத்தின் படி நிதி அறிக்கைகளில் சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 10 திட்டங்களின் சார்பாக 8 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறத்தக்க ரூபா 14.85 மில்லியன் பழைய மீதிகளை தவறு திருத்தங்களாக, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான இலாபத்திற்கு எதிராக பணியகம் பதிவழித்திருந்தமையால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இலாபம் அந்தத் தொகையால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் முடிவுகளின் படி இவ்வாறு கணக்கியல் பிழைகள் சரி செய்யப்பட்டுள்ளன.	பெறுமதி இழப்பு ஒதுக்கீட்டில் சேர்க்க ப்பட்டுள்ள கடன்பட் டோர் நிலுவைகளு க்கான திருத்தங்கள் பணிப்பாளர் சபையால் அங்கீகரி க்கப்பட்டு நிறுத்தி வைத்த வருவாய்க்கு சரிசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

விடயம்	நிதிக் கூற்றுக்களின் படி ரூபா மில்.	நேரொத்த பதிவேட்டின் படி ரூபா மில்.	வேறுபாடு ரூபா மில்.	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சின் 12 கட்டுமானத் திட்டங் கள் தொடர்பான கடன்கள் மற்றும் 40 ஆலோசனைத் திட்டங்கள் தொடர் பாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சிலிருந்து பெற வேண்டிய மொத்த தொகை	205.16	42.14	163.02	ஒவ்வொரு கடன்பட்டோர் மீதி குறித்தும் தனித் தனி கருத்துகள் தெரிவிக்கப்பட்டதுடன் 30 சந்தர்ப்பங்களில், வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு நிலுவைகள் குறித்து நினைவூட்டல்கள் அனுப்பப்பட்ட போதிலும் எந்த பதிலும் கிடைக்க வில்லை.	பெறவேண்டிய நிலுவைகளின் சரியானதன்மை மற்றும் உளதாந் தன்மையை உறுதிப்படுத்த ஏற்றுக் கொள்ளக் கூடிய சான்றுகள் மற்றும் விவரங் களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக் கப்பட வேண்டு மென்பதுடன் நிலு வைத் தொகையை தாமதமின்றி மீட்டெ டுக்க பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)(i) வியாபார பெறவேண்டிய மீதி	53.20	62.16	8.96	வர்த்தக கடன்பட்டோர் மீதி களில் தேவையான	தொடர்புடைய தரப்பினரிடையே பெறத்தக்க

				மாற்றங்களைச் செய்ய துணை கம்பனி தவறியதால், ரூபா 8.9 மில்லியன் வர்த்தக கடன்பட் டோர் மீதியில் மாற்றம் ஏற்பட்டு ள்ளது.	மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைகளை ஒப்பிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) பெறவேண்டிய வேலை ஆரம்பித்தல் முற்பணம்	2,239.57	2,242.95	3.38	செலுத்த வேண்டிய வேலை ஆரம்பித்தல் முற்பண நிலுவை களில் தேவையான மாற்றங்களைச் செய்ய துணை கம்பனி தவறியதால், ரூபா 3.3 மில்லியன் முற்பணத்தில் மாற்றம் ஏற்பட்டு ள்ளது.	தொடர்புடைய தரப்பினரிடையே பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைகளை ஒப்பிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.4 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் அவதானிப்புக்கள் காரணமாக துணைக் கம்பனியின் (சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடட்) நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆவது பிரிவு மற்றும் கம்பனியின் நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு இல. 2.3.6 இன் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை காலத்தை கம்பனி ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்தல் வேண்டும். இருப்பினும், 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஏறத்தாழ ரூபா 883.88 மில்லியன் கிரயமான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தை மறு மதிப்பீடு செய்யாமலும், மதிப்பீட்டுத் தவறை சரிசெய்து, எல்கேஏஎஸ் 08 இன் படி நிதி அறிக்கைகளில் சரியான முன்கொண்டு செல்லும் மதிப்பைக் காட்டாமலும் கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.	மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாளில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்யவும், பொருத்தமான பிரிவுகளில் சொத்துக்களை மதிப்பிடவும் திட்டமிடப்ப ட்டுள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி சொத்துக்களின் பயனுள்ள பொருளா தார ஆயட்காலத்தை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்ய வேண்டும்.
(ஆ) நிறுவனத்தின் உள்ளக பிரிவுகளுக்கு இடையில் நிகழும் கொடுக்கல் வாங்கல்களை நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது ஒப்பிட்டு சரிசெய்வதன் மூலம் நிதி அறிக்கைகளை நியாயமாக சமர்ப்பிப்பது தொடர்பில் கம்பனியின் நிர்வாகம் கவனம் செலுத்தியிருக்க வேண்டிய போதிலும், வர்த்தக செலுத்த வேண்டியவை, செலுத்த	அந்தப் பொருட்கள் மேலும் விசாரிக்கப்பட்டு அடுத்த ஆண்டு முறையாகக் கணக்கிடப்படும்.	பணியகத்தின் உள்ளக பிரிவுகளுக்கு இடையில் நிகழும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளை நிதிக் கூற்றுக்களைத்

வேண்டிய கணக்குகள் மற்றும் வர்த்தக பெறத்தக்கவைகளான முறையே ரூபா 64.85 மில்லியன், ரூபா 28.42 மில்லியன் மற்றும் ரூபா 26.54 மில்லியன் தொகைகள் கம்பனியின் பெயரிலேயே உள்ளடக்கப்பட்டிருந்தன.		தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) நிறுவனத்தின் தள அலுவலகங்களுக்கு இடையே நிகழும் உள்ளக கொடுக்கல் வாங்கல்களான ரூபா 27.71 மில்லியன் உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் பிற வருமானத்தின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளமையால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வருமானம் அந்தத் தொகையால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது.	அடுத்த ஆண்டு முறையாகக் கணக்கிடப்படும்.	பணியகத்தின் உள்ளக பிரிவுகளுக்கு இடையில் நிகழும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ) 2024 ஜனவரி இல் நடைபெற்ற வருடாந்த இருப்பு மற்றும் சொத்து சரிபார்ப்பின் போது, தெற்கு மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறையில் உள்ள 03 செயற்திட்ட பிரிவுகளுக்குச் சொந்தமான இருப்புக்கள் மற்றும் பல்வேறு சொத்துப் பொருட்கள் அதிகமாக இருப்பது தெரியவந்ததுடன் ஏலங்கள் மற்றும் பிற நடவடிக்கைகள் மூலம் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் கம்பனியின் வள திட்டமிடல் (ERP) அமைப்பில் உள்ளடக்கப்பட் டுள்ளன. மேலும், பல சொத்துப் பொருட்களில் பற்றாக்குறைகள் இருந்தன. இருப்பினும், அந்த அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகளின் நிதிசார் பெறுமதிகள் அந்த அமைப்பில் சீராக்கப்பட்டு நிதி அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு, தொடர்புடைய பொருட்கள் எதிர்காலத்தில் கணக்கிடப்படும்.	அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகளின் நிதிசார் பெறுமதிகளை ERP அமைப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ) முந்தைய ஆண்டுகளில் அகற்றப்பட்டவற்றுடன் தொடர்புடைய அதிகப்படியான தேய்மான சரிசெய்தல்களைச் (Adjustment of Over – depreciatated amount in disposal from previous years) சேர்த்ததன் காரணமாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான பிற வருமானத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 2.74 மில்லியன் சொத்துக்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் இலாபமானது ரூபா 1.69 மில்லியனால் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.	மொத்த தேய்மானச் செலவோடு ஒப்பிடும்போது இந்தச் சரிசெய்தல் மிகக் குறைந்த தொகை என்பதால், அது தொடர்புடைய ஆண்டிற்கு சரிசெய்யப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டுக்கு உரித்தற்ற சொத்து அகற்றல் இலாபத்தை முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் பணியகத்திற்கு அறவிடப்பட	வேலை தொடக்க முற்பணங்களுக்கு ஈடுசெய்யக்	நிலுவைத் தொகையின் சரியான

	வேண்டிய மொத்த கடனாளி நிலுவை ரூபா 5,188.58 மில்லியனாக இருந்ததுடன், இதில் பொறியியல் கொள்முதல் கட்டுமான (EPC) பிரிவு தொடர்பான முறையே 3-5 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 200.29 மில்லியன் மற்றும் ரூபா 1342.39 மில்லியன் நிலுவைத் தொகைகளும், ஆலோசனைத் துறை தொடர்பான முறையே 3-5 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 658.45 மில்லியன் மற்றும் ரூபா 130.94 மில்லியன் நிலுவைத் தொகைகளும் அடங்கும். அதன்படி, பணியகத்திற்கு வர வேண்டியவற்றை சரியான நேரத்தில் வசூலிக்க முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காததுடன் பெற வேண்டியவற்றின் துணை ஆவணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாததால், பெற வேண்டிய மீதிகளின் உளதாந் தன்மை மற்றும் அவற்றின் மதிப்பை திருப்திகரமாக ஆராய முடியவில்லை.	கோரப்பட்டுள்ள தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் பணியகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்கு பதிலளிக்காதுள்ள நீண்டகால நிலுவைத் தொகைகளாக EPC பிரிவில் ரூபா 987.56 மில்லியன் மற்றும் ஆலோசனைப் பிரிவில் ரூபா 497.69 மில்லியன் அடையாளம் காணப்பட்டு ள்ளதுடன் பணியகத்தின் பணிப்பாளர் சபையானது, அமைச்சக கணக்காய்வுக் குழு மற்றும் பணியக கணக்காய்வுக் குழுவால் இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்திய போதிலும், இன்னும் எந்த நேர்மறையான பதிலும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக, 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, நிலுவைத் தொகை கணக்குகளில் சரியாக வழங்கப்பட வேண்டும் என்பதால், ரூபா 1,790.79 மில்லியனை அறவிட முடியாத கடனாகப் பதிவு செய்துள்ளோம்.	அளவுகளைக் கண்டறிந்து, ஆண்டு தோறும் நிலுவைத் தொகையைத் தொடர்ந்து சரிபார்ப்பதன் மூலம் நிலுவைத் தொகை யை சரியான நேரத்தில் வசூலிக்க அனைத்து நடவடிக் கைகளும் எடுக்க ப்பட வேண்டும்.
(ஆ)	கட்டுமானத் திட்டங்கள் தொடர்பாக முறையான பின்தொடர்வை மேற்கொள்வதன் மூலம் பிடி காசினை சரியான நேரத்தில் விடுவிக்க பணியகம் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் பெறத்தக்க நிலுவைத் தொகையான ரூபா 2,712.45 மில்லியன் பிடிகாசுத் தொகையில் ரூபா 691.21 மில்லியன் மற்றும் ரூபா 944 மில்லியன் தொகைகள் முறையே 3 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகவும் 05 ஆண்டுகளுக்கும் மேலாகவும் நிலுவையில் இருந்தன.	ஒப்பந்தங்களை இணக்கப்பா ட்டுடன் முடித்துக் கொள்ளல், பணிகள் நிறுத்தப்படுதல் மற்றும் நிதி சிக்கல்கள் போன்ற காரணங்களால் கட்டுமானத் திட்டங்கள் தாமதமாகி வருகின்றன. பல திட்டங்கள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இயங்குவதால், பிடி காசுகள் பெற வேண்டிய கணக்குகளில் எஞ்சியுள்ளது. மற்றொரு பிரச்சினை என்ன வென்றால், இறுதி சிட்டைக ளிற்காக நிரந்தர தொழில்நுட்பக் மதிப்பீட்டுக் குழுவின் (STC) ஒப்புதலைப் பெறுவதற்கு நேரம் எடுப்பதாகும்.	பணியகம் திட்ட ங்களை சரியான நேரத்தில் பின் தொடர்ந்து, தொடர்புடைய மாற்றங்களைச் செய்த பிறகு பிடி காசை அறவிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டியவை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் மொத்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா 2,103.68 மில்லியனாகவும், பொறியியல் கொள்முதல் கட்டுமான	எமக்கு உரித்தான கணக்கு மீதிகளை பட்டியல்கள் மூலம் உறுதிப்படுத்தலாம். மொத்த செலுத்த வேண்டிய மீதியில்	சரியான கடன் கொடுனர் பெறுமதிக ளைக் கண்டறிந்து, ஆண்டுதோறும்

(EPC) பிரிவில் 3-5 ஆண்டு காலகட்டத்திற்கு இடைப்பட்ட மற்றும் 5 ஆண்டுகளுக்கும் மேலான கடன் கொடுத்தோர் மீதி முறையே ரூபா 162.76 மில்லியன் மற்றும் ரூபா 696.83 மில்லியனாகவும், ஆலோசனைப் பிரிவில் 3-5 ஆண்டு காலகட்டத்திற்கு இடைப்பட்ட மற்றும் 5 ஆண்டுகளுக்கும் மேலான கடன் கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 3.89 மில்லியன் மற்றும் ரூபா 40.08 மில்லியனாகவும் இருந்தது. அதன்படி, நிலுவையில் உள்ள கடன் கொடுத்தோர்களின் நிலுவைகளை சரியான நேரத்தில் தீர்க்க பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ரூபா 1,592.09 மில்லியன் துணைக் கம்பனிக்கு செலுத்த வேண்டியதாகும். மேலும் இந்தத் தொகையை எங்கள் வாடிக்கையாளரிடமிருந்து பெறத்தக்க மீதியுடன் ஈடுசெய்த பின்னர், நிகர செலுத்த வேண்டிய மீதி ரூபா 500 மில்லியனாகக் குறைக்கப்படும்.	தொடர்ந்து நிலுவைத் தொகையைச் சரிபார்ப்பதன் மூலம் செலுத்த வேண்டிய மீதியை சரியான நேரத்தில் தீர்க்க அனைத்து நடவடிக் கைகளும் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் நடப்பு பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பிடிகாசு மீதி ரூபா 2,392.75 மில்லியனாக இருந்ததுடன் கணக்காய் வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வயது பகுப்பாய்வின் படி, ரூபா 756.86 மில்லியன் மற்றும் ரூபா 574.52 மில்லியன் என்பன முறையே 3 முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் 05 ஆண்டுகளுக்கு மேலாகவும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	தற்போதைய செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,712.45 மில்லியன் ஆகும், இதில் ரூபா 2,107.28 மில்லியன் துணை கம்பனிக்கு செலுத்த வேண்டியுள்ளது. எனவே, பிடிகாசுத் தொகையில் 90 சதவீதத்திற்கும் அதிகமானவை துணை கம்பனிக்கு ஒரு பொறுப்பாகக் காட்டப்படு கின்றன. இந்தத் தொகைக்கு சமமான தொகையை வாடிக்கையா ளரிடமிருந்து பெற வேண்டிய பிடிகாசுத் தொகையாக நாங்கள் பதிவு செய்துள்ளோம்.	பணியகத்தின் நிதி நடைமுறைகள் கையேட்டின்படி நிலுவைத் தொகையை சரியாக அடையாளம் கண்டு நிலுவையில் உள்ள பிடி காசுத் தொகையை சரியான நேரத்தில் தீர்க்க அனைத்து நடவடிக் கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

1.7 தொடர்புடைய தரப்புக்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தியிருக்காமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் துணைக் கம்பனியிடமிருந்து ரூபா 1,569.4 மில்லியன் பெற வேண்டிய மீதி காணப்பட்டதுடன் இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே முறையான மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த நிலுவைத் தொகையைத் தீர்க்கவோ அல்லது எதிர்கால கொடுக்கல் வாங்கல்களை நிர்வகிக்கவோ எந்தவொரு பயனுள்ள நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் இந்த மீதியானது 2017 முதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.	துணை கம்பனியானது ரூபா 2 மில்லியன் என்ற மிகச் சிறிய மூலதனத்துடன் தொடங்கப்பட் டதால், தாய் நிறுவனம் என்ற வகையில் பணியகமானது துணை கம்பனியை தொடங்கவும், திட்டங்களை எந்தத் தடையும் இல்லாமல் செயல்படுத்தவும் துணை கம்பனிக்கு நிதி உதவியை வழங்க வேண்டியிருந்தது. தாய் நிறுவனம் இந்த நிலுவைகளை துணை நிறுவனத்திற்கான மூலதனமாக அங்கீகரிக்க வேண்டுமென்பதுடன் இதற்காக துணை நிறுவனத்தின் நிர்வாகத்துடன் கலந்துரை யாடல்கள் நடத்தப்படும்.	பணியகத்திற்கும் துணை நிறுவனத் திற்கும் இடையிலான பரிவர்த்தனைகளுக்கு தெளிவான மற்றும் முறையான ஒப்பந்தங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் தொடர்புடைய பெறத்தக்க நிலுவை களை வெளிப்படுத்தி தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக் கான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 83, 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 114 மற்றும் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 26 (1)	பணியகத்தின் பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) ஆகிய மொத்தம் ரூபா 24.94 மில்லியன் நிலுவைத் தொகை மீது மீது ரூபா 33.89 மில்லியன் மிகைக் கட்டணத்தை விதித்திருந்த மையால் 2019 டிசம்பர் 31 இள் உள்ளவாறு மொத்தம் ரூபா 58.83 மில்லியன் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியுள்ளதாக 2024 செப்டம்பர் 18 அன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக் கப்பட்ட தகவலின்படி பணியக த்தால் உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. இருப்பினும், 2025 மே 31 அன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக் கப்பட்ட தகவலின்படி, மேற்படி மொத்த வரிகள் மற்றும் மிகை அறவீட்டுக் கட்டணங்களாக ரூபா 42.07 மில்லியன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் செலுத் தப்பட வேண்டியிருந்தது.	2025 மே 31 நிலவரப்படி, அபராதம் தவிர் த்து மீதமுள்ள தொகை ரூபா 8.18 மில்லியன் ஆனதுடன் இத் தொகை இந்த ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் செலுத்தப்படும். அபராதத்தை தள்ளுபடி செய்யக் கோரி ஆலோசனைக் குழுவிற்கு ஏற்க னவே ஒரு கடி தம் அனுப்பப்பட்டு ள்ளது.	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம் மற்றும் பெறுமதி சேர் வரிச் சட்டத்தி ன்படி, உள் நாட்டு இறை வரித் திணைக் களத்துக்குச் செலுத்தப்படாத வரிகளை அனுப்ப தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 607.50 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டில் ரூபா 747.54 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபம் ஒன்று காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 140.04 மில்லியன் பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. கடன்பட்டோர் மீதிக்கு ரூ. 40.99 மில்லியன் மதிப்பிழப்புகள் ஏற்படுத்தப்பட்டமை, பழைய கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 14.85 மில்லியன் கணக்கீட்டுத் பிழைகளை சரிசெய்தல், ஆண்டுக்கான விநியோகச் செலவுகளில் ரூபா 56.00 மில்லியன் அதிகரிப்பு மற்றும் வங்கி வட்டி விகிதங்களில் ஏற்பட்ட குறைப்பு காரணமாக நிதி வருமானத்தில் ரூபா 453.00 மில்லியன் குறைவு ஆகியவை இதற்கு முக்கிய காரணமாகும்.

2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குகள் மீதான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான பிரதான வருமானச் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அவற்றின் அதிகரிப்பு மற்றும் குறைவுகளின் விகிதாசாரத்துடன் கீழே தரப்படுகின்றன.

விபரம்	மீளாய்வாண்டின் பெறுமதி	முன்னைய ஆண்டின் பெறுமதி	முரண் {சாதகம் / (பாதகம்)}	மாற்றம் சதவீதத்தில்
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	(%)
வருமானம்				
நிர்மாணம்	7,157	4,009	3,148	79
மதியுரைச்சேவை	1,777	1,494	283	19
ஏனைய வருமானம்				
நானாவித வருமானம்	57.95	57.19	0.76	1
வாடகை வருமானம்	61.22	55.04	6.18	11
நிதி வருமானம்	443.19	896.77	(453.58)	51
செலவினம்				
நிர்வாக செலவினம்	562.15	577.79	(15.64)	3
விற்பனை மற்றும் விநியோக செலவினம்	56.57	0.60	55.97	9,328
நிதிக் கிரயம்	3.91	3.65	0.26	7

(அ) பணியகத்தின் ரூபா 4,414.55 மில்லியன் மற்றும் ரூபா 4,211.40 மில்லியன் பெறுமதியான முறையே நிதி வளங்கள் மற்றும் நிலையான சொத்துக்களை வினைத்திறமையாகப் பயன்படுத்தி அதன் வருவாயை அதிகரிப்பதில் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும்.

2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டுக்கான இலாபத்தன்மை வீதம் 7 ஆனதுடன் முன்னைய ஆண்டில் அது 4 சதவீதமாகக் காணப்பட்டது. இருப்பினும் செயற்பாட்டு இலாபச் சதவீதமானது முன்னைய ஆண்டில் 3 சதவீதமாகக் காணப்பட்டமை மீளாய்வாண்டில் 2 சதவீதமாகக் குறைவடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) பணியகத்தின் கீழுள்ள துணைக் கம்பனியின் அனுராதபுரம் தளத்தில் 2016 ஜனவரி 01 முதல் 2020 ஜுன் 22 வரை நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் காரணமாக துணைக் கம்பனி யின் நிர்வாக அதிகாரியின் பணி 2021 ஜனவரி 11 முதல் இடைநீக்கம் செய்யப்பட்டது. பின்னர், இந்த அதிகாரி 2021 ஜனவரி 11 முதல் அமலுக்கு வரும் வகையில் பணியகத்தின் பணியாளராக பணியகத்தின் தலைவரால் 2021 மே 24 தேதியிட்ட கடிதத்தில் மீண்டும் பணியக த்தின் சேவையில் இணைக்கப் பட்டார். இது தொடர்பாக	இந்த அதிகாரி பணியகத்தின் மேலதிக பொது முகாமையா ளராக இருந்து, மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனியின் அனுராதபுரம் தலைமை அலுவலகத்தில் பிரதம செயல்பாட்டு பொறியாளராக பணியாற்றியதால், இந்த தவறான நடத்தை குறித்து மேலும் விவரங்களை வழங்கு மாறு மத்திய பொறியியல் சேவைகள் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	விசாரணையை விரைவாக முடித்த பின்னர் பணியகமும் துணை கம்பனியும் பொருத்தமான ஒழுக்காற்று/ சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணியகம் அல்லது துணைக் கம்பனி எந்த விசாரணை யையும் நடத்தத் தவறியமை யால் தொடர்ந்தும் நிதி முறைகேடுகள் மற்றும் தவறான பயன்பாட்டிற்கு இது வழிவகுத்துள்ளமை கணக்காய் வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பணியகத்தின் பொறியியல் கொள்முதல் கட்டுமான (EPC) பிரிவைச் சேர்ந்த பன்னிரண்டு (12) தள அலுவலகங்கள் துணைக் கம்பனியின் தள அலுவலகங்களுக்கு 15 சந்தர்ப்பங்களில் தற்காலிக கடன்களை வழங்கியிருந்த துடன் மதிப்பாய்வு செய்யப்ப டும் ஆண்டின் இறுதியில் மொத்த கடன் தொகை ரூபா 766.34 மில்லியனில், மொத்தம் ரூபா 526.80 மில்லியன் தொகை 2 முதல் 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகவும் மொத்தம் ரூபா 260.14 மில்லியன் தொகை 5 ஆண்டுகளுக்கும் மேலாகவும் வசூலிக்கப்பட இருந்தது. இந்தக் கடன்களுக்கான வட்டியை அறவிட எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் கடன்களை வசூலிக்க எந்த திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்தக் கடனை வழங்குவதன் முக்கிய நோக்கம், முடிக்க ப்பட வேண்டிய திட்டங்களை விரைவாகக் கண்டறிந்து அவற்றை தொடர்புடைய சேவை நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதாகும். மேலும், இந்த தலைமை அலுவல கத்தை பொறுப்பேற்கும் நேரத்தில், அது நட்டத்தை ஏற்படுத்தி வந்ததுடன் வெளி தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகையும் ரூபா 700 மில்லியனுக்கும் அதிகமாக இருந்தது. நட்டத்தில் இயங்கும் தலைமை அலுவலகம் இலாபகரமான நிலைக்குத் திரும்புவதற்கு கணிசமான நேரம் எடுக்கும் என்பதாலும், வெளி தரப்பினர் கடனைத் தீர்க்க, ஒரு குறிப்பிட்ட திட்டத்தை முன்வைக்க முடியவில்லை	கடனை சரியான நேரத்தில் வசூலிக்க பொருத்தமான ஒப்பந்த பொறிமுறையை வடிவமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) நிதி அறிக்கைகளின்படி, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான பொறியியல் கொள்முதல் கட்டுமான (EPC) பிரிவின் செயற்பாட்டு இலாபம் முறையே ரூபா 74.73 மில்லியன் மற்றும் ரூபா 86.49 மில்லியன் ஆகும். இருப்பினும், அதன் 13 பிரிவுகளில் 7 பிரிவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 34.34 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை சந்தித்திருந்தன.	நிகர இலாபத்தை விட அதிகமான நிர்வாகச் செலவுகள் காரணமாக அதாவது வாகனங்கள் மற்றும் பிற சொத்துக்களின் தேய்மானம் காரணமாக பல கட்டுமானப் பிரிவுகள் நட்டங்களைச் சந்தித்துள்ளன. கட்டுமானப் பிரிவின் அதிகபட்ச நிகர இலாபம் 2.5 சதவீதம் என்ற சிறிய எண்ணிக்கையாகும். ஏனெனில் திட்டங்கள் துணை கம்பனிக்கு ஒதுக்கப்படுகின்றன. இருப்பினும், கட்டுமானப் பிரிவிற்குச் சொந்தமான சொத்துக்கள் துணை கம்பனிக்கு முழுமையாக	தொடர்ந்தும் நட்டத்தைச் சந்தித்து வரும் பொறியியல் கொள்முதல் கட்டுமானப் பிரிவு (EPC) செலவு முகாமைத்துவம் மூலம் இலாபகரமான நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

	மாற்றப்படாததால், பணியகம் இந்த செலவை ஏற்க வேண்டியுள்ளது.	
(ஆ) ஆலோசனைப் பிரிவு சமர்ப்பித்த நிதி அறிக்கைகளின்படி, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 72.50 மில்லியன் செயற்பாட்டு இலாபம் காட்டப்பட்டுள்ளது. அதேசமயம், அதன் 20 பிரிவுகளில் 8 பிரிவுகள் ரூபா 130.47 மில்லியன் செயற் பாட்டு நட்டத்தை சந்தித்திருந்தன.	ஆலோசனைப் பிரிவு எளிதில் அடையாளம் காண்பதற்கு ஏற்ற விதத்தில் சேவை மூலம் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சேவைப் பிரிவுகள் நட்டத்தைச் சம்பாதிப்பதால், திட்ட முகாமைத் துவப் பிரிவுகள் இலாபம் ஈட்டுகின்றன, எனவே அவை ஒட்டுமொத்த இலாபமாகக் கணக்கிடப்பட வேண்டும். இருப்பினும், நட்டத்தை ஏற்படுத்தும் பிரிவுகள் எதிர் காலத்தில் மறுசீரமைக்கப்பட்டு இலாபகரமானதாக மாற்றப்படும்.	மறுசீரமைப்பு முறை யான விதத்தில் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனைத் துறையில் நட்டத்தை ஏற்படுத்தும் செலவு மையங்களை இலாப கரமான நிலைக்கு கொண்டு வர நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ) சுகாதார அமைச்சுக்கான புதிய கட்டிட வளாகத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம், 2014 அக்டோபர் 25 ஆம் தேதியிட்ட Amap/14/1447/509/066 ஆம் இலக்க அமைச்சரவையின் ஒப்புதலுடன், 2014 அக்டோபர் 27 ஆம் தேதியிட்ட கடிதத்தின்படி, 10 தளங்கள் மற்றும் 230,000 சதுர அடி பரப்பளவு கொண்டதாக ரூபா 3,896.55 மில்லியன் (வரி அடங்கலாக) தொகைக்கு வடிவமைப்பு மற்றும் கட்டுமான அடிப்படையில் (Design and Build) 2014 ஒக்தோபர் 27 ஆம் திகதி பணியகத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. பணியகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கும் கட்டுமானப் பணிகள் மத்திய பொறியியல் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் இற்கும் ஒப்படைக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.		
(i) திட்டத்தின்படி 24 மாதங்களுக்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டியிருந் தாலும், அந்தக் காலத்திற்குள் பணி முடிக்கப்படாததுடன் இரு தரப்பினருக்கும் இடையே எந்த உடன்பாடும் எட்டப்பட்டிருக்கவில்லை.	2017 ஆம் ஆண்டின் இரண்டாவது அமைச்சரவை முடிவின்படி, சுகாதார அமைச்சிற்கும் பணியகத்திற்கும் இடையே 2018 ஜூன் 22 அன்று ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் அமைச்சரவை முடிவின்படி, இந்தத் திட்டத்திற்கான முற்பணம் 2016	தாமதங்கள் அதிக செலவுகளுக்கு வழி வகுப்பதால், கட்டு மானத்தை விரைவாக முடிக்கவும், சரியான மதிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தங்களின்படி இழப்புகளைத் தடுக்கவும் நடவடி க்கை எடுக்கப்பட

	ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து தொடங்கப்பட் டதுடன், இரண்டாவது அமைச்சரவை முடிவு பெறப்பட்ட பிறகு, மீதமுள்ள தொகை 2017 இறுதி வரை பல சந்தர்ப்பங்களில் முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டமை காரணமாக திட்டத்தை செயல்படுத்துவதில் பெரும் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.	வேண்டும்.
(ii) ஒப்பந்தம் இரண்டாவது முறையாக 2018 ஜனவரி 30 ஆம் தேதி வழங்கப்பட்டதுடன் 2018 ஜூன் 22 ஆம் தேதி கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்த திட்டம் 36 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கி 10 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டாலும், கட்டிடத்தின் 16 மாடி கான்கிரீட் கட்டமைப்பு நிறைவடைந்துள்ளதுடன் முழு திட்டத்தின் பௌதீக முன்னேற்றமும் அடையாளம் காணப்படவில்லை. கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கான கால நீட்டிப்புக்கான கோரிக்கைகளுக்கு இணங்க, 2023 டிசம்பர் 15 ஆம் தேதி வரை மட்டுமே கால நீட்டிப்புகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதன் பிறகு கால நீட்டிப்புக்கான தொடர்புடைய ஒப்புதல்கள் கோரப்பட்டிருந்தாலும், சுகாதார அமைச்சிடமிருந்து தொடர்பு டைய ஒப்புதல்கள் பெறப்படவில்லை.	தற்போது, கட்டுமானத்தின் பௌதீகப் பகுதியான கட்டமைப்பு (Structure) மற்றும் மேசன் வேலைகள் (Masonary Works) முடிக்கப்பட்டுள்ளதுடன் கட்டமைப்பு நிறுவலைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 ஆகஸ்ட் வரை அலுவலக பகிர்வு வேலை (Partition Arrangements) திட்டங்களு க்கான ஒப்புதல் பெறுவதில் தாமதம், அடிப்படைத் திட்டங்களை அங்கீகரிப்பதில் தாமதம் மற்றும் முற்பணம் பெறுவதில் தாமதம் என்பன இந்தக் கட்டுமானத்தை முடிப்பதில் தாமதத்திற்கான காரணங்களாகும். இந்த திட்டத்தின் கட்டுமான காலத்தை நீட்டிக்குமாறு கோரி தொடர்புடைய கடிதங்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கடிதங்கள் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2022 ஆகஸ்ட் க்குள் நிறுத்தப்பட்டன. எனவே, மதிப்பீட்டுடன் தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.	ஒப்பந்தத்தின்படி, திட்ட ங்களை உடனடியாக தயாரித்து ஒப்புதல் அளிப்பதுடன் விலை உயர்வு அபாயத்தைக் குறைக்க நிர்ணயிக்க ப்பட்ட காலக்கெடுவி ற்குள் கட்டுமானத்தை முடிக்க வேண்டும்.
(iii) 2024 ஜூலை இல் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பின்படி, 2017 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவு ரூபா 5,979.29 மில்லியன் (வரி உட்பட) ஆனதுடன் திட்டத்தில் முடிக்கப்பட்ட பணிகளின் நிதி மதிப்பு சுமார் ரூபா 2,752.65 மில்லியன் (வரி உட்பட) ஆகக் காணப்பட்டது. அந்தப் பணிகளுக்கான பட்டியல்களை ஒப்பந்த நிறுவனம்	இந்த கட்டிடத்தின் அனைத்து கட்டுமானப் பணிகளும் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால், முழு மதிப்பீட்டிற்கும் அமைச்சரவை ஒப்புதலைப் பெறுவதற்கான மதிப்பீடு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சகத்தின் அதிகாரிகள் தற்போது அதற்காக பணியாற்றி வருகின்றனர்.	நியாயமான மற்றும் யதார்த்தமான விலைகளை உள்ள டக்கிய மதிப்பீடுக ளைத் தயாரித்து, நிதி ஒதுக்கப்பட்டவுடன் தாமதமின்றி கட்டுமானத்தை முடிக்க பணியகம் கம்பனியை அறிவுறுத்த வேண்டும்.

வழங்கியுள்ளதுடன் அந்த நிறுவனத்திற்கு இதுவரை செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (20% முற்பணம் உட்பட) ரூபா 2,669.82 மில்லியன் (வரி நீங்கலாக) ஆகும். அதன்படி, இந்தத் திட்டத்தின் மீதமுள்ள பணிகளுடன் தொடர்புடைய பொருட்களின் விலைகளில் அதிக விலை ஏற்ற இறக்கங்கள் இருப்பதால், 2016 ஆம் ஆண்டின் அலகு விலையில் பணியை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், இந்தத் திட்டத்தின் மீதமுள்ள பணிகளுக்கான (மிகுதிப் பணிகள்) தற்போதைய விலைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீடு ரூபா 14,722.54 மில்லியன் (வரி உட்பட) ஆகும். அதன்படி, இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு ரூபா 11,835.4 மில்லியன் (வரி உட்பட) மேலதிக செலவு ஏற்பட வேண்டியிருப்பதால், தேவையான ஏற்பாடுகளை ஒதுக்க கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன, அதன்படி, கட்டுமானத்தை முடிக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(iv) 2024 அக்டோபர் 03 தேதியிட்ட கடிதம் மூலம், பணியகத்தினால் மேலதிக செயலாளருக்கு "கட்டம்-2" என திருத்தப்பட்ட மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளதுடன் 4வது மாடி வரை முடிக்க வேண்டிய பணிகள்/செயற்பாடுகள் தொடர்பாக ரூபா 7,965.27 மில்லியன் மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளது. 2024 டிசம்பர் 18 அன்று கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் போது 4வது மாடி வரையிலான பணிகள் மதிப்பீட்டின்படி மேற்கொள்ளப்படுவது கண்டறியப்பட்டாலும், 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் அந்த மதிப்பீட்டிற்கான ஒப்புதல் பெறப்படவில்லை. 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள், 47 பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டன, அதன்படி திட்டத்தில் முடிக்கப்பட்ட பணிகளின் நிதி மதிப்பு ரூபா 2,818.06 மில்லியனாக இருந்ததுடன், மொத்த மதிப்பு ரூபா 2,836.71 மில்லியனாகவே இருந்தது. அத்துடன், 4 சதவீத வடிவமைப்பு மற்றும் திட்ட முகாமைத்துவ கட்டணம் (Design & Project

2025 மார்ச் மாத இறுதியில், 49 பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டன, அதன்படி, திட்டத்தில் முடிக்கப்பட்ட பணிகளின் மொத்த மதிப்பு ரூபா 3,619.34 மில்லியன் ஆகும். (4 சதவீத திட்டமிடல் மற்றும் திட்ட முகாமைத்துவக் கட்டணங்கள் மற்றும் விலை மாறுபாடுகளுடன்) இந்தக் கொடுப்பனவுகள் அமைச்சரவை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டுமான மதிப்பீட்டிற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் இது நிச்சயமற்றது அல்ல. மேலே குறிப்பிட்டுள்ளபடி, அவர்கள் இது தொடர்பில் பணியாற்றி வருகின்றனர். இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை ஒப்புதல்களின் அடிப்படையில், ரூபா 5,979.29 மில்லியன் (வரி உட்பட) தொகை வரை செயல்படுத்த முடியும்.

கட்டிடத்தின் முழுமை யான நிறைவுக்கு தேவையான ஒப்புத ல்கள் பெறப்பட்ட வுடன், சரியான மதிப்பீடுகளின் அடிப்ப டையில் கட்டுமானம் விரைவாக செயல் படுத்தப்பட வேண்டும்.

Manangement Fee) மற்றும் ரூபா 466.49 மில்லியன் விலை உயர்வு (Price Escalation) உள்ளிட்ட மொத்தம் ரூபா 3,416.67 மில்லியன் ஆகும். இது அமைச்சரவை ஒப்புதல் அளித்த இரண்டாவது திட்டத் தொகையில் (ரூபா 5,979.9 மில்லியன்) இருப்பதால், இதுவரை இந்த பட்டியல்களுக்கு ரூபா 2,041.32 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ள போதிலும், இந்த அதிகரித்த விகிதங்கள் மற்றும் விலை உயர்வுகளுக்கான அமைச்சரவை ஒப்புதல் இதுவரை பெறப்படாததால், எதிர்கால கொடுப்பனவுகளுக்கு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது.		
(v) கட்டிடத்தின் கட்டுமானம் ஒப்படைக் கப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட போதிலும், இதற்காக தயாரிக்கப்பட்ட மொத்த செலவு மதிப்பீடு ரூபா 3,896.55 மில்லியனில் இருந்து ரூபா 14,722.54 மில்லியனாக அதிகரித்துள்ளது, அதாவது அதை முடிக்க இயலாமை காரணமாக ரூபா 10,825.99 மில்லியன் அல்லது 278% அதிகரித்துள்ளது. இருப்பினும், இதுவரை அங்கீகரிக்கப்பட்ட திட்ட மதிப்பு ரூபா 5,979.29 மில்லியன் மட்டுமே ஆகும். 2017 மே 26 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பாணையின்படி, சுகாதார அமைச்சின் பல பிரிவுகள் தனியார் இடங்களில் குத்தகை அடிப்படையில் அமைந்துள்ளதால், அந்தப் பிரிவுகளை கட்டுமானத்தில் உள்ள பிரதான கட்டிடத்திற்கு கொண்டு வரும் நோக்கில் உயரத்தை தளம் 10 இலிருந்து 16 தளங்களாக அதிகரிக்க முன்மொழியப்பட்டது. இருப்பினும், 16 தளங்களில் 04 தளங்கள் மட்டுமே தற்போது கட்டி முடிக்கப்படுவதால், மேற்கண்ட அமைச்சரவை குறிப்பாணை யிலிருந்து எதிர்பார்க்கப்படும் வாடகைக் கட்டணத்தைக் குறைக்க முடியாது என்பது அவதானிக்கப்பட்டது.	இந்த திட்டம் தற்போது 2026 இல் நிறைவடைய உள்ளதுடன் சுகாதார அமைச்சக அதிகாரிகள் இதற்காக மிக விரைவாக செயல்பட்டு வருகின்றனர். கொடுப்பனவுகள் மற்றும் பிற தேவைகள் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டால், இந்த திட்டம் 2026 இல் நிறைவடையும், மேலும் வாடகை அடிப்படையில் தற்போதுள்ள அலுவலகங்களை 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்த வளாகத்திற்கு மாற்ற முடியும்.	சம்பந்தப்பட்ட தரப்பின ருடன் கலந்துரையாடி இந்த திட்டத்தை விரைவாக முடித்து கட்டிடத்தை பயன்பாட் டிற்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.
(vi) இந்தத் திட்டத்தின் கட்டுமான ஒப்பந்ததாரரான துணை கம்பனி, 2018 ஜூன் 20 அன்று ரூபா 6.93 மில்லியன் செலவில் 11,500 Bar	இருப்பினும், கட்டுமானப் பணியின் போது கட்டிடத்தின் அடிப்படை வடிவமைப்பில் (Structural Design) ஏற்பட்ட மாற்றத்தால், பயன்படுத்த	கட்டுமானத் திட்டத்திற்கான முக்கிய ஒப்பந்ததாரர் ஆலோசனைப்

Couplers வாங்கியது. இந்தத் திட்டத்திற்குத் தேவையான Bar Couplers அளவு சரியாகக் கணக்கிடப்படாததால், ரூபா 4.63 மில்லியன் மதிப்புள்ள 7,628 Bar Couplers வாங்கியதால் அவை சேமிப்பாகியிருந்தன. இந்தப் பொருட்களை விற்பனை செய்ய இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தேவையான அளவை விட அதிகமாக இவ்வாறு கொள்முதல் செய்வது நிறுவனத்தின் தொழிற்படு மூலதனம் /பணப்புழக்கத்தில் பாதகமான விளைவை ஏற்படுத்தியது.	வேண்டிய கம்பிகளின் அளவு குறைக்கப்பட்டது. இதன் காரணமாக மேற்கூறிய Bar Couplers அதிகமாக உள்ளன.	பணியகம் என்பதால், துணை கம்பனியின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.
(vii) இந்தத் திட்டத்திற்காக ரூபா 69.39 மில்லியன் செலவில் வாங்கப்பட்ட 500 Sheet Pile சுமார் 1000 நாட்கள் பயன்படுத்தப்பட்ட பிறகு திட்ட இடத்தில் குவிந்து கிடந்தன. இதன் விளைவாக, நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் திட்ட இடத்தில் விளைவற்று இருந்ததால் அவை காலாவதியாகியிருந்ததுடன் அவை காலாவதியாகிவிடுவதற்கு முன்பு அவற்றை விற்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	இந்த நிலைமை 2023 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டு, இந்த மூலப்பொருட்களை மறுவிற்பனை செய்ய பணிப்பாளர் சபைக்கான பத்திரத்தின் மூலம் 23.08.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி, மேற்கூறிய Sheet Pile கையிருப்பை கூறுவிலை கோரல் மூலம் மறுவிற்பனை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும், அந்த நேரத்தில் அதற்கான முறையொன்று நிறுவனத்திடம் காணப்படவில்லை. இந்த Sheet Pile கையிருப்பு விற்பனைக்காக உள்ளது.	கட்டுமானத் திட்டத்துடன் தொடர்புடைய முக்கிய ஒப்பந்தக் கட்சி ஆலோசனைப் பணியகம் என்பதால், துணை கம்பனியின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) பணியகத்திற்குச் சொந்தமான RV-1537, 46-2726, RV-1493 மற்றும் RV-1346 ஆகிய எண்களைக் கொண்ட 4 டிராக்டர் டிரெய்லர்கள் பணியகத்தின் வாகனங்களின் கீழ் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வின் போது அவை நேரடியாகக் காணப்படவில்லை. இது தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்படாததுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	டிராக்டர் டிரெய்லர்கள் தொடர்பாக விசாரணை நடத்த மிகவும் பழைய கோப்புகள் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. தொடர்புடைய வாகனங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு, தொடர்புடைய அறிக்கை எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும்.	விசாரணை உடனடியாக முடித்து தொடர்புடைய அறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் நிதி அறிக்கைகள் முறையான விதத்தில் சரிசெய்யப்பட வேண்டும்.
(ஆ) பணியகத்தால் பணியமர்த்தப்பட்ட 186 உத்தியோகத்தர்களுக்கு, பொது திறைசேரியிடமிருந்து ஒப்புதல் பெறாமல், அவர்களின் வீடுகளிலிருந்து அ லுவலகத்திற்கு கொண்டு செல்ல தங்கள் தனியார்	பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன சுற்றறிக்கையின்படி இந்தக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன.	பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்குவதுடன் தேவையான திருத்தங்களுக்கு திறைசேரியின் ஒப்புதலை

வாகனங்களைப் பயன்படுத்தியதற்காக மொத்தம் ரூபா 29.90 மில்லியன் போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.		தாமதமின்றிப் பெற வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, பணியகத்திற்குச் சொந்தமான 43 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அவை பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வில்லை அல்லது அப்புறப்படுத்தப் படவில்லை. மேலும், பணியக த்திற்குச் சொந்தமான PE-7599 என்ற எண்ணைக் கொண்ட குரூ கெப் (Crew Cab) வாகனம் 2021 ஜூன் 04 அன்று துணை கம்பனியின் பொலன்னறுவை கிளைக்கு (MKDP) வழங்கப்பட்டதுடன் ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்படுத்த ப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இதன் தற்போதைய நிலை துணை கம்பனியால் பணியகத்திற்கு தெரிவிக்கப்படா ததுடன் பணியகம் அதன் துணை கம்பனிக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் குறித்து தொடர்ந்து பின்தொடர்வை மேற்கொண் டிருக்கவில்லை.	பயன்படுத்த முடியாத 43 வாகனங்களை அப்புறப்படுத் தவோ அல்லது விற்கவோ பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளதுடன், இது தொடர்பாக ஏற்கனவே ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் இந்த ஆண்டு அது நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	பழுதுபார்க்கப்படாத மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை நிதி இழப்பு ஏற்படாதவாறு நியாயமான விலையில் விற்க வேண்டுமென்ப துடன் பணியகத்தால் அதன் துணை கம்பனி க்கு வழங்கப்பட்ட வாகனங்கள் குறித்து வழக்கமான பின் தொடர்தல் மேற்கொள் ளப்பட வேண்டும்.
(ஆ) அமைச்சுகள் மற்றும் பிற நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளைச் செய்ய அரசு நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற போதிலும், மிக அதிக சந்தை மதிப்பைக் கொண்டுள்ளதும் பணியகம் 1990 ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியனுக்கு கொள்வனவு செய்திருந்ததுமான டி.பி. ஜெயா மாவத்தை (டாலி வீதி), கொழும்பு இலுள்ள 02 ரூட் மற்றும் 24.5 பேர்ச் நிலம் எந்தவொரு உற்பத்தி பொருளாதார நடவடி க்கைக்கும் பயன்படுத்தாமல், நீர்ப்பாசன அமைச்சின் தலைமை அலுவலகத்தின் வாகன நிறுத்துமிட த்திற்கு எந்த கட்டணமும் இல்லா மல் பணியகம் வழங்கியிருந்தது.	இந்த விடயம் விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமை த்துவக் குழு கூட்டங்களில் விவாதிக்கப்பட்டதுடன், அங்கு இந்த அதிக மதிப்புள்ள நிலத்திற்கு குத்தகை அல்லது பிற பொருத்தமான நிலத்தை எங்களுக்கு வழங்குமாறு நாங்கள் கோரினோம், மேலும் இந்த நிலத்தில் மகாவலி வளாகத்தை தொடர்ந்து பராமரிக்கும் போது மாற்றுத் திட்டத்தைத் தயாரிக்குமாறு அமைச்சகம் கோரியுள்ளது.	2021 நவம்பர் 16 தேதியிட்ட அரச முயற்சிகளின் சுற்ற றிக்கை இல. 01/2021 ஆல் அறிமுகப்படுத் தப்பட்ட அரச நிறுவ னங்களுக்கான செயல் பாட்டு கையேட்டின் பந்தி 6.8 இன் படி அரச நிறுவனங்களின் வளங்கள் பயன்படுத் தப்பட வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பணியகத்தின் நடுத்தர முகாமைத்துவ நிலை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டங்களுக்காக எந்தவொரு ஆட்சேர்ப்பு நடைமுறையும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமும் 2025 மார்ச் 31 வரை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட் டிருக்கவில்லை.	முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் நீர்ப்பாசன அமைச்சினால் 2022 அக்டோபர் 31 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலு க்காக சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகம், 2023 பெப்ரவரி 15 தேதியிட்ட கடிதம் இல. DMS/1712/Voll. II இன் மூலம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்ப ட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். இருப்பினும், பொறியியல் பணி தொடர்பான ஆலோசனை நிறுவனமாக செயல்படுகையில் அவ்வாறான மாதிரியின்படி ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தை தயாரிப்பதில் ஏற்படக்கூடிய நிறுவன சிக்கல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டன. மேலும், நடுத்தர முகாமைத்துவ நிலை தொடர்பான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்க ளத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.	பணியகத்தின் நடுத்தர முகாமைத்துவ நிலை மற்றும் சிரேஷ்ட முகாமை த்துவ மட்டங்களுக்காக எந்தவொரு ஆட்சேர் ப்பு நடைமுறையும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமும் முகாமைத் துவ சேவைகள் திணைக்கள த்திடம் அங்கீகரித்துக் கொள்வதை துரிப்படுத்த வேண்டும்.
(ஆ)	பணியகத்தின் 13 அதிகாரிகள் சம்பளமில்லா விடுப்பில் வெளிநாட் டுப் பயணத்திற்காக மொத்தம் ரூபா 17.09 மில்லியன் பிணை ஒப்பந்தங்களைச் செய்திருந்ததுடன் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதிக்குள், 08 அதிகாரிகளிட மிருந்து மொத்தம் ரூபா 6.56 மில்லியன் பிணை பத்திரங்கள் இன்னும் நிலுவையில் இருந்தன.	சம்பந்தப்பட்ட வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் பணத்தை வசூலிக்க கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	பிணை ஒப்பந்தங்களை மீறிய அதிகாரிகளிடமிருந்தோ அல்லது உத்தரவாததாரர்களி டமிருந்தோ நிலுவையில் உள்ள பணத்தை வசூலிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.